# DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

## IN THE COURT OF SESSIONS JUDGE,

NAGAPATTINAM.

**Sessions Case No. 06/2023 & 64/2023**

**Deposition of Witness for Prosecution : P.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ்குமார் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 12.02.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது தெற்கு பொய்கைநல்லூாரில் வசித்து வருகிறேன். இறந்து போன மனோகர் எனக்கு தம்பி உறவு முறை ஆவார். 17.08.2022 ம் தேதி இரவு 9.30 மணிக்கு மனோகரிடம் வேலை பார்க்கும் மணிவேல் என்பவர் எனக்கு போன் மூலம் கிரேடனும் அவருடன் உள்ள மூன்று நபர்களும் கடைக்குள் புகுந்து எங்கள் தலைவர் அப்பான் (எ) மகேஷ்வரன் எதுக்கிறியாடா இதோடு சாகுங்கடா என்று என்னை வெட்டினார் என்றும். சீக்கிரம் வாங்க என்று சொன்னார். எதிரிகள் ஒன்றாவதாகவும் இரண்டாவதாகவும் இருக்கின்றனர். எங்களுக்கும் மகேஷ்வரனுக்கும் பரவை HRNC சந்தையை மாற்றிய மாங்கா சந்தை என்ற இடத்தில் வைத்து கொண்டு அங்கு வியாபாரம் செய்யும் வியாபாரியிடம் எந்த ஒரு அனுமதியில்லாமல் மகேஷ்வரன் அவரது தம்பி மதியழகன் அவருடைய ஆட்கள் குணா, விஜய், முருகானந்தம், ரமேஷ், அருள் அரசன், சுப்பிரமணியன் ஆகியோர்கள் சேர்ந்து அடாவடியாக வசூல் செய்கிறார்கள். ஒரு நாளைக்கு 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வரை வசூல் செய்து அவர்களே எடுத்து கொள்கிறார்கள். அவர்களில் மதியழகன், குணா,

விஜய், முருகானந்தம், ரமேஷ், அருள் அரசன், சுப்பிரமணியன் நீதிமன்றத்தில் இருக்கிறார்கள். சங்கர் இடத்தில் உள்ள சந்தையில் என்னுடைய தம்பி மனோகர் நான் மற்றும் சங்கத்தின் சார்பாக அந்த இடத்தில் வசூல் செய்ய கூடாது என்றும், வசூல் செய்த தொகையை இந்து அற நிலைய துறைக்கு ஒப்படைக்க வேண்டும் என்றும், சங்கர் இடத்தில் சந்தை நடக்க கூடாது என்றும், அந்த சந்தை எப்போதும் பழைய சந்தை நடக்கும் இடத்தில் நடக்க வேண்டும் என்று சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனுவாக கொடுத்தோம். மாவட்ட ஆட்சியர், RDO, BDO, AD பஞ்சயாத்து, வட்டாட்சியர் ஆகியோர்களிடம் மனு கொடுத்தோம். அவர்கள் அதற்கான விரைவான நடவடிக்கை இல்லாததால் நாங்கள் சென்னை உயர் நீமன்றத்தை நாடி நீதிமன்றம் மூலம் உத்தரவு வாங்கினோம். அந்த இடத்தில் காலி செய்ய சொன்னார்கள். இதனால் பரவை சந்தை அப்பான் (எ) மகேஷ்வரன், அவருடைய தம்பி மதியழகன், அவரது அடியாட்கள் விஜயர், குணா, முருகானந்தம், ரமேஷ், அருள் அரசன், சுப்பிரமணியன் ஆகியோர்களுக்கும் எங்களுக்கும் முன் விரோதம் இருந்தது. இந்த சந்தையை மாற்றுவது சம்மந்தமான விழியங்களில் எனது தம்பி மனோகர் தான் செயல்படுவர். இது தான் எங்களுக்குள் உள்ள பிரச்சணை . மணிவேல் என்பவர் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார், நான் எனது தந்தை வீராச்சாமி, தம்பி மணிவண்ணன், எங்களுடைய நண்பர் சரவணன் எல்லோரும் கார் எடுத்து கொண்டு வேளாங்கண்ணி முச்சந்தி சேகர் ஹோட்டலுக்கு அருகாமையில் உள்ள TVR பைனான்ஸ் எனது தம்பி கடைக்கு சொன்றோம். நாங்கள் சென்ற போது வெட்டுப்பட்ட எனது தம்பியும், வெட்டுபட்ட மணிவேல் அங்கு இருந்தார்கள். அவர்களை காரில் ஏற்றிக்கொண்டு நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். அங்கு அவரை பரிசோதனை செய்துவிட்டு மனோகர் இறந்து போய்விட்டதாக சொன்னார்கள். மணிவேலுவை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை மேற்கொண்டோம். அதன் பின்பு தெற்கு பொய்கை நல்லூர் மணிகண்டன், ராஜிவ்காந்தி அவர்கள் இருவரும் என்னிடம் வந்து மனோகரை பார்ப்பதற்காக இரவு 8.30 மணிக்கு வேளாங்கண்ணிக்கு போய் கொண்டு இருந்த போது சிவன் கோவில் சின்ன

பாதையில் விளக்கு வெளிச்சத்தில் கிரேடன், ஆகாஷ் ஆகியோருடன் 5, 6 நபர்கள் கூட்டமாக நின்று கொண்டு இருந்தார்கள் என்றும். ஆகாஷ் எனக்கு தெரியும். அவர் நீதிமன்றத்தில் இல்லை. (6, 15 வது எதிரி தரப்பில் கடும் ஆட்சேபனையின் பேரில் பதிவு செய்யப்பட்டது) சாட்சி கேள்வி நிலை சாட்சி . அப்போது மணிகண்டனும், ராஜிவ்காந்தியும் ஆகாஷ்டமும் கிரேடனிடமும் என்னப்பா கூட்டமாக இருக்கின்றதே என்று கேட்டதாகவும், அதற்கு அவர்கள் இருவரும் அவர்கள் சென்னையில் இருந்து வந்து இருப்பதாகவும் சொன்னார்கள். அதன் பின்னிட்டு அவர்கள் மனோகர் கடைக்கு பணம் வாங்குவதற்கு சென்று உள்ளார்கள். அங்கு மனோகர் இல்லை கடை மூடியிருப்பதால் லேட்டாக வருவோம் என்று ஆர்ச் பக்கம் சென்றுவிட்டார்கள். அதன் பின்னிட்டு 9.15 மணியளவில் திரும்ப மனோகர் கடைக்கு வந்தார்கள் என்றும். கடைக்கு எதிரே இடது பக்கம் பைக்கை நிறுத்துவிட்டு இறங்கினார்கள் என்றும். அப்போது மனோகர் கடை வாசலில் வெளிச்சமாக இருக்கும் அப்போது நான்கு பைக்கில் வந்தார்கள் என்றும், கடை அருகில் பைக்கில் இறங்கினார்கள் என்றும். அதில் ஒரு நபர் கிரேடன் ஏற்கனவே மூன்று நபர்கள் சிவன் கோவில்லில் பார்த்த நபர்கள் என்றும். அந்த மூன்று பேரும் கிரேடனும் சேர்ந்து கடைக்கு உள் புகுந்து மனோகர் மற்றும் மணிவேலை வெட்டுகிறார்கள் என்றும். வெளிளில் பைக்கில் ஆதிக்குமார் மகன் ஆகாஷ் மற்ற மூன்று பைக்கில் ஏற்கனவே சிவன் கோவலில் பார்த்த மூன்று நபர்கள் பைக்கை வைத்து கொண்டு ரெடியாக இருந்தனர் என்றும், உள்ளே சென்று வெட்டிய நபர்கள் வெளியில் நின்ற பைக்கில் ஏறி ஆர்ச்சை நோக்கி சென்றனர் என்று கூறினார். ஆர்ச் கடையில் இருந்து மேற்கு பகுதியில் உள்ளது. அதற்க்கு பின்பு தெற்குபொய்கைநல்லூரை சேர்ந்த அறிவழகனும், விழுந்தமாவடியை சேர்ந்த வீராச்சாமியும் என்னிடம் நாங்கள் பரவைக்கு சென்றோம். பரவைக்கு போகும் வழியில் புதிய சந்தையில் இருவரும் பேசி கொண்டு இருந்ததாகவும், அப்போது தெற்கு பொய்கைநல்லூரை சேர்ந்த அப்பான் (எ) மகேஷ்வரன், அவரது தம்பி மதியழகன், அவருடைய ஆட்கள் விஜய், குணா, முருகாணந்தம், ரமேஷ்,

அருள்அரசன், சுப்பிரமணியன் ஆகிய எல்லோரும் சேர்ந்து புதிய சந்தையில் லைட் வெளிச்சத்தில் பைக்கை நிறுத்தினார்கள் என்றும். பைக்கை நிறுத்திய சிறிது நேரத்தில் வேளாங்கண்ணியில் இருந்து நான்கு பைக்கு வேகமாக வந்து புதிய சந்தையில் நின்றது என்றும். அந்த பைக்கில் இருந்து இறங்கி கிரேடனும், ஆகாஷ்சும் நீங்கள் சொன்ன மாதிரி மனோகரை வெட்டிவிட்டோம் என்றும், கூட இருந்த மணிவேலையும் வெட்டிவிட்டோம் என்றும், நீங்கள் சொன்னது மாதிரியே நாங்கள் செய்து விட்டோம் என்று சொன்னவுடன் நீங்கள் அந்த இடத்தை விட்டு கிளம்புங்கள் நான் மீதியை பார்த்து கொள்கிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டு உடன் அப்பான்னும் அவருடன் இருந்தவர்களும் சென்றுவிட்டார்கள். அதன் பின் வேளாங்கண்ணியில் இருந்து காவல் துறையினர் வந்தனர். நான் தான் புகார் கொடுத்தேன். புகாரினை நான் வாய் மொழியாக சொன்னேன் அதனை அவர்கள் எழுதி கொண்டார்கள். அந்த புகாரை திருப்பி என்னிடம் படித்து காண்பித்து என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கு பின்பு வேளாங்கண்ணி காவல்துறையினர் மனோகர் அலுவலகத்திற்கு வர சொன்னார்கள். கடையில் VAO, VAO உதவியாளர், காவல்துறையினர் இருந்தார்கள். அந்த கடையில் இருந்த CCTV கேமரா பதிவை பெற்று கொண்டார்கள். என்னிடம் படித்து காண்பித்து 65 B (4) இந்திய சாட்சிய சட்டத்தின் படி சான்றிதழ் பெறப்பட்டது. அந்த ஹார்டு டிஸ்க் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த 65 B சான்றிதழ் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( எதிரி தரப்பில் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.ஆ.2 உரிமையாளரோ, அதிகாரம் பெற்ற நபரோ முறையாக 65 B (4) நிபந்தனை கடைப்பிடிக்கப்படவில்லை) இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**<u>1 மற்றும் 10 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்து அறநிலைய துறை சொர்நபூரிஸ்வரர் கோவில் காய்கறி மார்க்கேட் சங்க தலைவர் ஆவேன் என்றால் சரிதான். சாட்சி மற்றும் புகார்தாரர் அ.தி.மு

கட்சியை சார்ந்தவர் 1 வது எதிரி தி.மு.க கட்சியை சேர்ந்தவர் என்றால் சரிதான். தெற்கு பொய்கைநல்லூர் பஞ்சாயத்து தலைவர் தேர்தலில் போட்டியிட்டு 1 வது எதிரி வெற்றிபட்டார் என்றால் சரிதான். 2020 ம் ஆண்டு மார்ச் மாதத்தில் கோவிட் 19 நோய் பரவியது எனக்கு தெரியும். அரசு மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர் பொதுமக்கள் கருத்து கேட்டு கோவிட் 19 நடைமுறையின் படி மக்கள் கூட்டம் அதிகமாக உள்ளதால் வேறு ஒரு தேவாலாயம் சொந்தமான இடத்தில் மாற்றினார்கள் என்றால் சரிதான். 1 வது எதிரி நெருக்கடியின் காரணமாக தான் மாற்றினார்கள். தேவாலயத்தில் மாற்றப்பட்ட பிறகு வியபாரிகளுக்கு நன்றாக தான் இருந்தது. அதனால் வேறு இடத்திற்கு மாற்ற தேவையில்லை. வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு விவரம் தெரிந்து நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்து அறநிலைய துறை மார்க்கேட் இடம் தெற்கு பொய்கை நல்லூர் பஞ்சாயத்து பகுதிக்கு உட்ட பகுதி என்றால் சரிதான். இந்து சமய அறநிலையத்துறை இடத்தில் காய்கறி மார்க்கேட்டில் வசூல் எதுவும் செய்யவில்லை இந்து சமய அறநிலையத்துறை இடத்தில் சட்ட விதிமுறையின் படி ஏலம் விட்டுதான் காய்கறி மார்க்கேட்டில் வசூல் செய்யப்பட்டது. வசூல் செய்யப்பட்ட தொகையில் 15 சதவீதம் பஞ்சாயத்திற்கு வரி செலுத்த வேண்டும் என்றால் சரிதான். இந்து சமய அறநிலைய துறை அதிகாரிகள் மற்றும் ஆளுங்கட்சி ஆட்களை கையில் போட்டு கொண்டு வசூல் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. 1 வது எதிரி சட்ட விரோதமான ஏலத்தை எதிர்த்து ரிட் மனு 9461/2020 என்ற மனு தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மணிகண்டன் என் உறவினர் இல்லை, என் ஊர்காரர். மேற்படி ரிட் விவரங்கள் எனக்கு தெரியும் என்றும், நான் தெரிந்து கொண்டே வேண்டும் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ரிட் மனு நிலுவையில் உள்ள போதே என்னுடைய சொந்தகாரர் மணிகண்டன் என்பவர் அதிகபட்சமாக ஏலம் கோரியதை எதிர்த்து 1 வது எதிரி ரிட் மனு தாக்கல் செய்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அந்த ரிட் மனு எண். 1835/2021. புகார் தாரர் தரப்பில்

தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் எதாவது போலீஸ் விசாரணையில் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். கொடுத்த ஆவணத்தை பற்றி விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 1 வது எதிரி தெற்கு பொய்கைநல்லூர் பஞ்சாயத்து தலைவர் என்ற முறையில் காய்கறி மார்க்கேட் கட்டுவதற்கு பஞ்சாயத்தில் தீர்மானம் போட்டு தீர்மானம் நிறைவேற்றி பல ஆண்டு காலமாக ஆளுங்கட்சி அதிகாரம் இருந்ததன் பேரில் ஏலம் எடுத்து வசூல் செய்ததை பாதிக்கும் என்பதால் நாங்கள் ஆதாயம் பெறுவதற்காக காய்கறி கடையை மாற்றுவதால் நஷ்டம் அடைவோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் 1ம் எதிரியின் மீது முன் விரோதம் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. 1 வது எதிரி சட்ட விரோதமாக காய்கறி மார்க்கேட்டில் 20 ஆயிரம் 25 ஆயிரம் ரூபாய் வசூல் செய்ததை புகார் எதுவும் காவல்துறையிலோ அல்லது வேறு துறையிலோ கொடுத்துள்ளீர்கள் என்றால் கொடுத்துள்ளோம். போலீஸ் விசாரணையில் புகார் மனு ஆவணமாக கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை( 20 ஆயிரம் 25 ஆயிரம் ரூபாய் வசூல் செய்தது சம்மந்தமாக). எனது தம்பி இறந்ததை சாதகமாக பயன்படுத்தி 1 வது எதிரி மற்றும் அவரது தம்பியை பொய்யாக வழக்கில் சேர்த்தால் எனக்கு போட்டியாக இருக்காது என்ற காரணத்தினால் புகாரினை ஆலோசனையின் பேரில் ஜோடிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் போலீஸ் விசாரணையில் என்னுடைய தொலை பேசி எண்ணையோ, எனக்கு தகவல் சொன்னவரின் தொலை பேசி எண்ணையோ சொன்னேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் குடியிருக்கும் வீட்டிற்க்கும் சேகர் டீ கடை முச்சந்திக்கும் இடையில் துாரம் 3 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். என் தம்பி பைனான்ஸ் கடையில் இருந்து ஒரு 50 அடி மேற்கே தென்புறமாக வந்து கால் கிலோ மீட்டர் திரும்பினால் வேளாங்கண்ணி காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்க்கு நான் எனது அப்பா மற்றும் தம்பி செல்வதற்க்கு முன்பே வேளாங்கண்ணி போலீசார் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்று சொன்னால் நான் பார்க்கவில்லை. நான் செல்வதற்க்கு முன்பே சம்பவ இடத்தில் வேறு நபர்கள் இருந்தார்கள் என்றால்

நான் பதட்டத்தில் பார்க்கவில்லை. நான் சம்பவ இடத்தில் என் தம்பி வெட்டு பட்டு கிடந்தவரை நான் தூக்கி காரில் ஏற்றவில்லை, நான் கார்தான் ஓட்டி சென்றேன். என் தம்பியையும் மணிவேலையும் நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் ஒரு புற காவல் நிலையம் இருந்தது என்றால் இருக்கலாம். புறகாவல் நிலையம் போலீசார் என்னையும் காயம் பட்ட மணிவேலையும் விசாரணை செய்தார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என் தம்பி, மணிவேலுவை மருத்துவமனையில் சேர்த்த போது மருத்துவரிடம் தகவல் சொன்னது யார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அ.சா.ஆ.1 ஐ எழுதியது போலீகாரர் அதை எழுதியது எந்த போலீஸ்காரர் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அ.சா.ஆ.1 ல் நான் கையெழுத்து இட்டதில் தேதியில்லை, எந்த தேதியில் கொடுத்தேன் என்று குறிப்பிடபடவில்லை. எத்தனை மணிக்கு வாக்குமூலம் எழுதி பதிவு செய்யப்பட்டது என்று ஞாபகம் இல்லை. அ.சா.ஆ.1 அரசு சாட்சிகளான மணிகண்டன், ராஜிவ்காந்தி சம்பவத்தை பார்த்ததாக புகாரில் குறிப்பிட்டு புகார் மனு ஜோடிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.2 ஹார்டு டிஸ்க் கைபற்றியது பற்றி போலீசார் அறிவிப்பு கொடுத்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. புகார் கொடுத்த அன்றே அ.சா.ஆ.2 ஐ போலீசார் கைபற்றினார்கள். என் முன்னிலையில் VAO, போலீசார் கழட்டி கைப்பற்றினார்கள், நான் கழட்டி கொடுக்கவில்லை. அ.சா.ஆ.2 ஐ யார் கழட்டி கொடுத்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அ.சா.ஆ.2 ஹார்டு டிஸ்கில் உள்ள படத்தை போலீசார் எனக்கு போட்டு காண்பிக்கவில்லை. போலீஸ் விசாரணையில் கிராம நிர்வாக அதிகாரிகள் முன்னிலையில் கைபற்றிய விவரத்தை விசாரணையில் சொன்னேன் என்றால் ஞாபகம் இல்லை. CCTV கேமரா யார் பொறுப்பில் இருந்தது என்றால் எங்கள் பொறுப்பில் இருந்தது. அதனை பராமரிக்கும் பொறுப்பு என் தம்பி தான் பார்த்து வந்தார். எனக்கு CCTV கேமரா இயக்க தெரியாது. இன்றைய தேதி வரை போலீசார் CCTV கேமராவில் பதிவு செய்யப்பட்டுள்ள சம்பவத்தை போட்டோ அல்லது படத்தை போட்டு காண்பிக்க வில்லை என்றால் சரிதான்.

சம்பவ இடம் வேளாங்கண்ணி பகுதியில் பிரபலமான இடம் என்றால் சரிதான். என் தம்பி சேகர் டீ கடை மற்றும் அனைத்து வணிக கடைகளிலும் CCTV கேமரா பொறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தம்பி உட்கார்ந்து இருந்த இடத்தில் 500 ரூபாய் கட்டுகள் இருந்தது என்றால் நான் அதனை கவனிக்கவில்லை. நான் சம்பவ இடத்தில் பார்க்கும் போது இரத்த கறை படிந்த கைரேகைகள் இருந்ததை நான் பார்த்தேனா என்றால் ஞாபகம் இல்லை. அ.சா.ஆ.2 ல் உள்ள CD NVR_ch23_main_20220817210001_20220817220000.asf 9.46.28 போலீஸ்காரர் இரு சக்கர வாகனத்தில் அந்த ரோட்டில் சென்றார் என்றால் சரிதான். CD NVR_ch23_main_20220817210001_20220817220000.asf 9.46.38 போலீசார் ரோட்டில் இருசக்கர வாகனத்தை நிறுத்தி இறங்குகிற காட்சி உள்ளது என்றால் சரிதான். CD NVR_ch23_main_20220817210001_20220817220000.asf 9.48.05 மற்றோறு போலீசார் அதே சம்பவ இடத்தில் இரு சக்கர வாகனத்தை நிறுத்தி இறங்குகிறார் என்றால் சரிதான். CD NVR_ch23_main_20220817210001_20220817220000.asf 9.48.27 மணிக்கு இரு சக்கர வாகனத்தில் வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி வாகனத்தை ஓட்டி வந்து சம்பவ இடத்தில் நிறுத்தினார் என்றால் தெரியவில்லை. CD NVR_ch23_main_20220817210001_20220817220000.asf 9.49.33 மணிக்கு போலீசார் கிழக்கில் இருந்து வந்து தெற்கு நோக்கி திரும்புகிறார் என்றால் எங்கு போகிறார் என்று தெரியாது. வேளாங்கண்ணி முச்சந்தி ரோட்டில் காவல் துறை நிறுவியுள்ள CCTV கேமரா காட்சிகள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் 1, 10 எதிரிகளுக்கு எதிராக மணிகண்டன், ராஜிவ்காந்தி, வீராச்சாமி எனது உறவினர் என்பதாலும், அவர்களை வழக்கில் சாட்சியாக காண்பித்தும் ஏற்கனவே புனையப்பட்ட சாட்சிகளுக்கு கண்ணுற்ற சாட்சியாக சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில், தேதியில்,விதத்தில் சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை என்றும், நான் சொன்னது போல் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால்

சரியல்ல. நான் சொல்வது போல் அ.சா.ஆ.2, 3 முறையாக கைப்பற்றபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1 வது எதிரி பஞ்சாயத்து தலைவர் என்ற முறையில் பஞ்சாயத்திற்கு வர வேண்டிய வருவாய்க்காக சட்ட நடவடிக்கை எடுத்ததாகவும், அவர் அண்ணா தி.மு.க ஆட்சி காலத்தில் தி.மு.க. பஞ்சாயத்து தேர்தலில் வெற்றி பெற்றதாலும், முன் விரோதத்தை வைத்து தான் வழக்கில் எதிரியாக சேர்த்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. 1 வது எதிரிக்கும் 10 எதிரிக்கும் வழக்கிற்க்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன மனோகருக்கும் 1வது எதிரி மற்றும் 10 எதிரிக்கும் இடையே முன்விரோதம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மனோகர் 1வது எதிரிக்கு எதிராக நடவடிக்கையில் ஈடுப்பட்டார் என்று சொன்னால் சரியல்ல. மனோகருக்கு அவர் தொழில் போட்டியாக நிறைய நபர்கள் எதிரிகளாக இருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. 10 வது எதிரி எனது தம்பி கொலை வழக்கில் சாட்சி சொன்னதால் அவர் வழக்கில் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

**<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2 வது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. 2 வது எதிரி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை.

**<u>3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையில் மூத்த வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. 3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

**<u>5 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>** இல்லை

**<u>6 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4 மற்றும் 7 எதிரி தரப்பில் 6 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை தழுவிக்கொள்கிறார்கள்.

பிறந்தது வளர்ந்தது தெற்கு பொய்கை நல்லூர் என்றால் சரிதான். கடந்த 10 ஆண்டுகளாக என் மீதும் என் தம்பி மீதும் கொலை வழக்குகள் பதிவு

செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற எண். 95/2011 கொலை வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் என் மீது ஒரே ஒரு கொலை வழக்கு தான் இருந்தது அது முடிந்துவிட்டது. இறந்து போன மனோகரன், சாட்சி மணிகண்டன், நான் கொலை குற்றவாளியாக சேர்க்கப்ட்டுள்ளனர் என்றால் சரிதான். வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் 2019 ம் ஆண்டு கள்ளச்சாராயம் தயாரித்ததாக என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2020 வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் குற்ற எண். 44/2020 தெருவில் சண்டை போட்டது சம்மந்தமாக என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை. 2016 ல் குற்ற எண். 53 ல் என் மீது குவிமுச வழக்கு போட்டார்கள் என்றால் ஞாபகம் இல்லை. 2012 ல் குற்ற எண். 85 ல் படைகள சட்டத்தின் படி என் மீது வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை. குற்ற எண். 53/2023 ல் பிராத்தல் நடத்தியதாக என் மீது வழக்கு போட்டார்கள் என்றால் பொய்வழக்கு போட்டார்கள். இறந்த என் தம்பி மனோகரன் மீதும் குற்ற எண். 95/2011 ல் என்னுடன் உடன் குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். 2018 ல் 2 பிராத்தல் வழக்குகளும், 2020 ல் ஒரு பிராத்தல் வழக்கும் (215/2018, 480/2018, மற்றும் 33/2020). எனது சகோதரர் மனோகரன் மீது குற்ற எண். 49/2017 என்ற எண்ணில் கள்ளச்சாராயம் விற்றதாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை. குற்ற எண். 151/2018 பிராத்தல் நடத்தியதாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை. எனது தம்பியின் பிரதான தொழில் வட்டிக்கு விடுவது, பிராத்தல், கள்ளச்சாராயம் விற்பனை செய்வதுதான் தொழில் என்று சொன்னால் சரியல்ல. என் தம்பி வட்டிக்கு விடும் தொழில் தான் செய்து வந்தார். என் தம்பி நடத்திவரும் பைனான்ஸ் நிறுவனத்தில் யார் யார் பங்கு உரிமையாளர் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வட்டி தொழில் செய்வதற்கு அரசிடம் அனுமதி பெற வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தம்பி மனோகரர் நடத்திவரும் வட்டி கடை நடத்துவதற்கான உரிமம் பெற்றுள்ளாரா என்பதை காண்பிக்க கூடிய ஆவணம் என்னிடம் இல்லை என்றால் சரிதான். எனது தம்பி மனோகர் எத்தனை வருடம் வட்டி தொழில் நடத்தி வந்ததார் என்றால் எனக்கு

ஞாபகம் இல்லை . எனது தம்பி நடத்தி வந்த வட்டி தொழிலில் நான் நிற்வகித்து வந்தற்க்கு எந்த ஆவணம் இல்லை என்றால் சரிதான். என் தம்பி நடத்தி வந்த கடைக்கு டி.வி, ஏ.சி, சிசிடிவி கேமரா எப்போது வாங்கினார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஏ.சி., டி.வி, கேமரா யார் பரமாரிப்பார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அ.சா.ஆ.2 எவ்வாறு இயங்குகிறது என்று சொன்னால் அது நன்றாக இயங்குகிறது என்று கூறுகிறார். அ.சா.ஆ.2 ல் பழுது ஏற்பட்டால் அதனை சரி செய்ய எனக்கு தெரியாது. அ.சா.ஆ.2 ஐ பொறுத்து இந்திய சாட்சி சட்டம் 65 B யின் படி சான்று அளிக்க தகுதி இல்லாத நபர் என்று சொன்னால் சரியல்ல. நான் வழங்கியதாக சொல்லப்படும் அ.சா.ஆ.3 செல்லாது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.1 ல் என்னுடன் குற்றவாளியாக இருந்த சாட்சி மணிகண்டன் எதிரி சிவன் கோவில் முன்பு கூட்டமாக பேசி கொண்டு சம்பவத்திற்கு முன்பு இருந்ததை என்னிடம் சொன்னதாக நான் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. மாங்கா சங்கரின் சந்தை இடத்தில் 1 வது எதிரி நின்று கொண்டு இருப்பதாகவும் மற்ற எதிரிகள் அங்கு வந்து இரு சக்கர வாகனத்தை நிறுத்தி விட்டு நான் சொன்னதை போல் மனோகரனை கொலை செய்துவிட்டோம் என்று சொன்னதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் புகாரில் சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. என் மீதும் என் சகோதரன் மனோகரன் மீதும், எங்கள் மீது சுமத்தப்பட்ட கொலை வழக்கில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு எங்கள் மீது விரோதம் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. அதே போல் என் மீதும் என் சகோதரன் மனோகர் மீதும் 12 வழக்குகளில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு எங்கள் மீது மன விரோதமும், நோக்கமும் இருந்தது என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் புதிதாக சொல்லியுள்ள தகவல்களை காவல் துறையினரின் ஆலோசனையின் படி வழக்கிற்காக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மணிகண்டன் என்பவர் என்னுடன் குற்றவாளி என்பவர் என்ற காரணத்தினால் வழக்கில் சாட்சியாக போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. 6 ம் எதிரிக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**4 மற்றும் 7 எதிரி தரப்பில் 6 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை தழுவிக்கொள்கிறார்.**

**4 மற்றும் 7 எதிரிக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.**

**8 வது எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை, அவருடைய வழக்கறிஞர் ஆஜர் இல்லை, குறுக்கு விசாரணை இல்லை.**

**11, 14, 16 எதிரிகள் தரப்பில் 1 மற்றும் 10 எதிரிகள் குறுக்கு விசாரணையை தழுவிக் கொள்கிறார்.**

**13 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

தெற்கு பொய்கை நல்லூரரை சேர்ந்த 10 நபர்களில் 4 நபர்கள் அரிவாளுடன் கடைக்குள் வந்து வெட்டியதாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சத்யநந்தன் கொலை வழக்கு மற்றும் தொழில் போட்டி காரணமாக நிறைய எதிரிகள் இருந்தார்கள் அவர்களில் யார் ஏனும் கொலை சம்பவத்தை நிகழ்த்திவிட்டு 13 வது எதிரியை வழக்கில் சம்மந்தமில்லாமல் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.2 ஹார்டு டிஸ்கில் என்ன பிராண்ட் என்று ஞாபகம் இல்லை. அ.சா.ஆ.2 ஹார்டுடிஸ்கில் பதிவு செய்யப்பட்டுள்ள கேமரா பதிவில் எவ்வளவு பதிவு செய்யப்படுள்ளது என்றால் தெரியாது. போலீஸ் என்னிடம் கேமரா பதிவுகளை போட்டு காட்டவில்லை என்றால் சரிதான். கைபற்றிய சமயத்தில் நான் இல்லாத காரணத்தினால் தான் எவ்வாறு கைபற்றி எடுத்து சென்றார்கள் என்று சொல்ல தெரியவில்லை என்றால் சரியல்ல. 13 வது எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. சாட்சி அறிவழகன் என் வீட்டின் அருகில் உள்ளார். சாட்சி வீராச்சாமி என் அப்பா இல்லை, வீராச்சாமி என்ற சாட்சி வேளாங்கண்ணியில் கடை வைத்திருப்பதால் அவர் எனக்கு தெரிந்தவர். சாட்சிகள் வீராட்சாமி, அறிவழகன் புனையப்பட்ட சாட்சிகள் என்றும், அந்த சமயத்தில் எதிரிகளை பார்த்தாக கூறப்படுவது புனையப்பட்டது என்றால் சரியல்ல.

**15 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வேளாங்கண்ணிக்கும் தெற்கு பொய்கை நல்லூருக்கும் 2 கிலோமீட்டர் தூரம் இருக்கும். இரண்டு ஊர்களுக்கும் ஒரே எல்லை தான். எனக்கு கிடைத்த தகவலின் படி எனது தம்பி மனோகரன் கொலை செய்யப்பட்டது 17.08.2022 இரவு சுமார் 9.30 ஆகும். முதல் உதவி செய்யும் அளவிற்க்கு வேளாங்கண்ணியில் மருத்துவமனைகள் இல்லை. வேளாங்கண்ணியில் தனியார் மருத்துவமனைகள் உள்ளது என்றால் சரிதான். வேளாங்கண்ணிக்கும் நாகப்பட்டினத்திற்கும் 13 கிலோமீட்டர் இருக்கும் என்றால் சரிதான். நாகப்பட்டினத்தை பொறுத்தவரை அரசு மருத்துவமனை தான் பெரிய மருத்துவமனை அதனால் என் தம்பியை நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன். புகார் வாக்கு மூலத்தின் படி 18.08.2022ம் தேதி 00.15 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனோகர் இறந்துவிட்டதால் பிரேத கிடங்கிற்க்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரிதான். வாக்கு மூலம் கொடுத்த பிறகு வீட்டிற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்று ஞாபகம் இல்லை. முருகானந்தம் வழக்கில் உளவு பார்த்தாகவோ யார்யார் வழக்கில் எதிரிகளாக சேர்க்க வேண்டும் என்று பின் யோசனையுடன் சம்பவத்தை பெறுத்து 15 வது எதிரியின் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இறந்து போன என் தம்பி மீது போடப்பட்டிருந்த விபச்சார வழக்குகளில் எந்த இடத்தில் வைத்து விபசார குற்றம் நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. என் தம்பிக்கோ எனது குடும்பத்திற்கோ சொந்தமாக தங்கும் விடுதி கிடையாது. தினசரி வசூல் செய்கிற விதத்தில் தான் எனது தம்பி வட்டிக்கு பணம் கொடுத்து வசூல் செய்து வாங்குகிறார் என்றால் சரிதான். அவ்வாறு தினமும் வசூல் செய்வதற்க்கு கந்து வட்டி என்று சொன்னால் தெரியாது. என் மீதும் இறந்து போன என் தம்பி மீதும் இருந்த கொலை வழக்கில் ஏற்ப்பட்ட பகைமை, ஆளுங்கட்சி எதிர் கட்சிக்கு இடையேயான பகை, விபச்சார வழக்குகளில் ஏற்ப்பட்ட போட்டியின் காரணமாக ஏற்ப்பட்ட பகை, என் தம்பி மீது இருந்த

கள்ளச்சாராய வழக்குகளில் உள்ள பகை, கந்துவட்டியால் பாதிக்கப்பட்டவர்களின் கோபம் ஆகிய பல காரணங்களால் தான் எனது தம்பியின் கொலைக்கு காரணம் என்றாலும், 15 வது எதிரியான முருகானந்தத்திற்கும் வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் தம்பியோடு சேர்த்து காயம்பட்ட மணிவேலை நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சேர்த்த போது அவர் பற்றிய விவரங்களை யார் கூறினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

**17 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் இடம் கடைகள் இருக்கும் பகுதி என்றால் சரிதான். ரோட்டின் ஒரு பக்கம் தான் கடை உள்ளது. எதிர் புறம் காம்பவுண்ட் சுவர் உள்ளது. சம்பவம் நடந்த ரோட்டின் இருபக்கம் கடைகள் உள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திற்கு வலது பக்கம், இடது பக்கம் நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அருகில் உள்ள கடைகாரருக்கு போனில் தகவல் சொன்னார்களா என்றால் இல்லை. நானும் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. சம்பவம் நடந்த இடம் கடை தெரு என்றும் நான் வேண்டும் என்றே கடை தெரு இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தெற்கு பொய்கைநல்லூரில் இருந்து வேளாங்கண்ணிக்கு வரமால் நாகப்பட்டினம் செல்வதற்க்கு ரோடு உள்ளது என்றால் சரிதான். பொய்கை நல்லூரில் இருந்து வேளாங்கண்ணி செல்லாமல் கோரக்கசித்தர் கோவில் வழியாக நாகப்பட்டினம் செல்வதற்கு 7 கிலோமீட்டர் தூரம் உள்ளது. தகவல் கிடைத்து எத்தனை மணிக்கு சம்பவ இடம் சென்றேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் காரை என் தம்பி கடை வாசல் ரோட்டில் நிறுத்தினேன். நான் கார் நிறுத்தியது CCTV கேமராவில் உள்ளது. CCTV கேமராவை போலீசார் என்னிடம் போட்டு காட்டவில்லை. மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் ஞாபகம் இல்லை. மருத்துவமனைக்கு நான், என் அப்பா, தம்பி மணிவண்ணன், நண்பர் சரவணன் ஆகியோர் சென்றோம். சரவணன் உடன் நான் மருத்துவமனையில் பேசி கொண்டு இருந்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மருத்துவமனையில் மருத்துவரிடம் என்

சகோதரர் மனோகரன், மணிவேலுக்கு எவ்வாறு காயம்பட்டது என்ற விவரத்தை யார் சொன்னார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நேரங்கள் ஞாபகம் இல்லை என்று வழக்கை பாதிக்கும் என்பதால் ஞாபகம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வேளாங்கண்ணியிலோ அல்லது நாகப்பட்டினத்திலோ இருக்கும் காவல் நிலையங்களில் சம்பவம் குறித்து தகவல் சொல்ல வேண்டும் என்று ஞாபகம் வரவில்லை. போலீசார் GH வந்தார்கள் எப்படி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான், எனது அப்பா மற்றும் தம்பி மணிவண்ணன் ஆகியோர்களை எனது காரில் அழைத்து வேளாங்கண்ணிக்கு செல்லவில்லை என்றும், நாங்கள் காயம் பட்ட நபர்களை நாகப்பட்டினத்திற்கு ஏற்றி வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சாட்சி சரவணன் நாகப்பட்டினத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். சரவணன் எனக்கு சொந்தம் இல்லை. சரவணன் ஏன் என் வீட்டிற்கு வந்தார் என்று போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னை சம்பவம் அன்றே போலீசார் என் தம்பி கடையில் வைத்து விசாரணை செய்தார்கள். என் மீதும் என் தம்பி மீதும் நிறைய வழக்குகள் மேலே கேட்டுள்ள படி காவல் நிலையத்தில் உள்ளது என்றாலும், அதனால் எங்களுக்கு நிறைய நபர்கள் எதிரிகளாக இருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் சகோதரரையும், காயம் பட்ட மணிவேலையும் யார் தாக்கினார்கள் என்ற விவரம் எனக்கோ சாட்சிகளுக்கோ தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிக்க மோப்ப நாய் வர வைக்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு சம்பவ இடத்தை மோப்பம் பிடித்து அதில் இருந்து பல இடங்களுக்கு ஓடி சென்ற என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றும் அதை சொன்னால் இந்த வழக்கு பாதிக்கப்படும் என்பதால் மறைத்து எனக்கு தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரரையும், காயம் பட்ட மணிவேலையும் சம்பவ இடத்தில் இருந்து வேறு யாரோ கொண்டு வந்து மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள் என்றும், எனக்கு மிகவும் வேண்டிய நாகப்பட்டிணத்தில் உள்ள சாட்சி சரவணனை

தொலை பேசியில் தொடர்பு கொண்ட நாகப்பட்டினம் மருத்துவமனைக்கு சென்று பார்க்க சொல்லி அவர் தகவல் சொன்னார் என்றால் சரியல்ல. சரவணன் சாட்சி என்னுடன் வந்ததாக நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி ஜெனிபர் என் கொழுந்தியா, சாட்சி மணிவண்ணன் என் சகோதரர், சாட்சி வீராச்சாமி எனது தகப்பனார். சாட்சி மணிகண்டன், ராஜிவ்காந்தி, அறிவழகன், வீராச்சாமி ஆகியோர்கள் எனக்கு வேண்டிய நபர்கள் என்பதால் தான் அவர்களை இந்த வழக்கிற்க்கு சாட்சியாக விசாரணை செய்ய சொல்லி விவரம் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி வீராச்சாமி விழுந்தமாவடி ஊரை சேர்ந்தவர். அது வேளாங்கண்ணியில் இருந்து 12 கிலோமீட்டர் தெற்கே உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.1ல் சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சிகள் இருந்ததாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ 1 ஐ எழுதியது யார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. இந்த அ.சா.ஆ.1 ஐ எப்போது எந்த தேதி, எந்த நேரத்தில் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் ஞாபகம் இல்லை. நான் சொல்லுகின்ற நேரத்திலும், தேதியிலும் அ.சா.ஆ.1 பின்னர் நாங்கள் யோசனை செய்து பொய்யாக உற்ப்பத்தி செய்யப்பட்ட புகார் என்று சொன்னால் சரியல்ல. என்னை போலீசார் விசாரணை செய்த போது RDO,DRO, ஆகியோரிடம் எதிரி 1 மீது நான் கொடுத்த புகார்களை பற்றி போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் சரவணனை என் காரை எடுத்து கொண்டு சம்பவ இடத்திற்கு சென்றதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னை போலீசார் விசாரணை செய்த போது சாட்சி மணிகண்டன், சாட்சி ராஜிவ்காந்தி இருவரும் சம்பவம் தொடர்பாக விவரங்களை சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணை செய்யும் போது அவர்கள் இருவரும் சம்பவ தேதி அன்று தம்பி கடைக்கு சம்பவத்திற்கு சற்று நேரத்திற்கு முன்பு சென்றதாகவும், கடை மூடியிருந்ததாகவும், திரும்பி வந்துவிட்டதாகவும் மறுபடியும் கடைக்கு சென்றதாகவும் போலீசார் விசாரணை செய்யும் போது

சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவிலை என்று சொன்னால் சரியல்ல. எனது தம்பியை அவர் கடைக்கு சென்று அவரை தூக்கி என் காரில் ஏற்றி கொண்டு வந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அதனை சொல்லியுள்ளேன். எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிரிகளை வழக்கில் சிக்க வைத்தால் தனது ஊரில் எந்த எதிரிகளும் இல்லாமல் போய்விடுவார்கள் என்று சொன்னால் சரியல்ல.

**18 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

13 வது எதிரிதரப்பு குறுக்கு விசாரணையை தழுவிக்கொள்கிறார்.

**19 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

19 வது எதிரி தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை, வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை.

**பிரித்து எடுக்கப்பட்ட அமர்வு வழக்கு எண். 64/2023 ல் 9 மற்றும் 12 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 10 எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை தழுவிக் கொள்கிறார்கள்.

**மறு விசாரணை**

மறு விசாரணை இல்லை.